ராணி காமிக்ஸ்
மூன்று வீரர்களின்
முரட்டுத் தாக்குதல்
சர்வாதிகாரி
ரூ.5

ராணி காமிக்ஸ் – 448
(மாதம் இருமுறை இதழ்)
பிப்ரவரி 16, 2003.

துப்பாக்கியை வீழ்த்திய சாட்டை!

சர்வாதிகாரி

சாட்டை வீரன் பிலிப்

ஆளுநர் அல்போன்சா

கொள்ளைக்காரன் வால்டர்

வங்கி மானேஜர் ஆஸ்கர்

அமெரிக்காவில் உள்ள டெக்சாஸ் நகரம். மூன்று குதிரை வீரர்கள் வந்து இறங்கினார்கள்.

மூவரும் ஓட்டலுக்குள் நுழைந்தார்கள்.
மூவரும் ஒரே அறையில் தங்கப் போகிறீர்களா? எத்தனை நாள்?
இந்த ஓட்டலே எங்களுக்குச் சொந்தம்!
வரவேற்பாளர் அதிர்ச்சி அடைந்தார்.
துப்பாக்கிகளைப் பார்த்ததும் நாங்கள் கொள்ளைக்காரர்கள் என்று நினைத்தீர்களா?
அப்படித்தான் இருக்கிறீர்கள்!
ஆனால், நாங்கள் நல்லவனுக்கு நல்லவர்கள்! வல்லவனுக்கு வல்லவர்கள்!!
ஓட்டல்களில் கலாட்டா பண்ணமாட்டோம். நம்பி எங்களுக்கு ஒரு அறை கொடுங்கள்.

அப்போது ஒரு சாரட்டுவண்டி வந்தது.
இங்கேதான், நிறுத்து!
மூவரும் ஒரு அறையில் தங்கினார்கள். வண்டியிலிருந்து ஒரு தடித்த ஆள் இறங்குவதை பிலிப் பார்த்தான்.
லியோ! சைமன்! ஒரு பூதம் வருகிறது! வந்து பாருங்கள்!!

வந்தவர், வரவேற்பாளரைச் சந்தித்தார்.
நான் மெக்சிகோவில் இருந்து வருகிறேன் இந்த ஓட்டலில் மூன்று குதிரை வீரர்கள் வந்து தங்கியிருக்கிறார்களா?
அது நாங்கள் தான்! நீங்கள் யார்?
நான் மெக்சிகோ ஆளுநர். ஒரு முக்கிய விஷயமாக உங்களுடன் பேச வந்திருக்கிறேன்.
மகிழ்ச்சி! உள்ளே வாருங்கள், பேசுவோம்!


சாப்பிட்டுக்கொண்டே பேசினார்கள்.
நான் மெக்சிகோவில் பாலீஸ் பிராந்திய ஆளுநர். என்னோட பிராந்தியத்தில் கொள்ளைக் காரர்களின் தொல்லை தாங்க முடியவில்லை!
அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

கொள்ளைக்காரர்களைப் பிடிக்க உங்கள் உதவி வேண்டும்.
உங்கள் இராணுவத்தால் பிடிக்க முடியவில்லையா?

இராணுவம் போரில் ஈடுபட்டிருக்கிறது. நீங்கள் கொள்ளைக்காரர்களைப் பிடித்துக் கொடுத்தால், உங்களுக்குப் பத்தாயிரம் டாலர் தருகிறேன்.
பணம் இருக்கட்டும். நாங்கள் வீண்வம்புக்குப் போவதில்லை.
சைமன்! நீ என்ன நினைக்கிறாய்?
கொள்ளைக் காரர்களிடம் இருந்து மக்களைக் காக்கவேண்டியது நமது கடமை!

நீங்கள் புறப்படுங்கள்! மற்றதை நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம்!
சுடச்சுட சீன நூடில்ஸ்!
வேண்டாம்! மெக்சிகோ உணவு கொண்டுவா!

ஆளுநர் ஊர் திரும்பினார். எதிரில் ஒரு இராணுவ தளபதி வந்தார்.
மேஜர் எங்கே?
கொள்ளையன் வால்டர் பற்றி ஒரு துப்புக் கிடைத்தது. அவனைப் பிடிக்கப் போயிருக்கிறார்!
அது சரியான துப்பாக இருக்காது. நம்மை திசை திருப்பும் வேலையாக இருக்கும்!
வெறும் ஏமாற்று வேலையா?

திடீர் என்று சிலர் குதிரையில் பாய்ந்து வந்தார்கள் !
ஆ ! கொள்ளைக்கூட்டம் ! நான் சொன்னேன் அல்லவா ?

வண்டி மின்னல் வேகத்தில் பறந்தது !
குதிரைகளை அடித்து விரட்டு !

கொள்ளையர்கள் விரட்டினார்கள்!
சுடட்டுமா?
கூடாது! கவர்னரை உயிரோடு பிடிக்க வேண்டும்!

ஆளுநரின் வண்டி காற்றாகப் பறந்தது!
இன்னும் வேகமாப் போ!
வண்டி குடை சாய்ந்து விடக்கூடாதே!

இராணுவ தளபதி சுட்டார்!
பழிக்குப் பழியாகக் கொள்ளையர்கள் தளபதியை சுட்டுவீழ்த்தினார்கள்.
ஆ...!

தளபதி இறந்ததும் ஆளுநர் பதறினார்!
எனக்கும் அந்தக் கதிதானா?
பயப்படாதீங்க! முன்னே பாருங்க!

மேஜர் வீரர்களுடன் விரைந்து வந்துகொண்டிருந்தார்.
நல்லவேளை, பிழைத்தேன்!

கொள்ளைக்காரர்கள் பின்வாங்கி ஓடினார்கள்!
சார், அவர்களைத் துரத்திப் பிடித்து விடுகிறேன்!
வேண்டாம், மேஜர்! நீங்கள் போய் விட்டால், எனக்குப் பாதுகாப்பு இல்லை!
சரி, மாளிகைக்குப் போவோம்!

மலைப் பகுதியில் குகைகள் இருக்கின்றன அவற்றில் கொள்ளையர் பதுங்கிக்கொள்ளுகிறார்கள், சார்!
இனி பதுங்கிப் பயனில்லை! அவர்களைப் பிடிக்க நல்ல ஏற்பாடு செய்துவிட்டேன்!

ஆளுநரும், மேஜரும் போவதை மலைமீதிருந்து கொள்ளைக் கூட்டத்தலைவன் வால்டர் பார்த்தான்.
நம்ம குறி கொஞ்சம் தவறிவிட்டது! ஆனால், கவர்னரை விடமாட்டேன்!!

ஒரு வாரம் ஓடியது. வங்கி மேலாளரை ஆளுநர் தனது மாளிகைக்கு அழைத்தார்.
இதில் இரண்டு இலட்சம் டாலர் இருக்கிறது. என் கணக்கில் வரவு வையுங்கள்!
ஏற்கனவே உங்கள் பணம் 27 இலட்சம் டாலர் இருக்கிறது. அதோடு இதையும் வரவு வைத்துக்கொள்ளுகிறேன்!
பெரிய தொகையை எடுத்துப் போகிறேன். பாதுகாப்புக்கு உங்கள் வீரர்களை அனுப்புங்கள்!
அடடா! வீரர்கள் எல்லோரும் கொள்ளைக் கூட்டத்தைப் பிடிக்கப் போயிருக்கிறார்களே!

கொள்ளையருக்குப் பயந்துதான் நான் பாதுகாப்பு கேட்கிறேன்!
சாதாரணமாகப் போவதுதான் நல்லது!
பாதுகாப்புடன் போனால், நீங்கள் பணம் எடுத்துப் போவது கொள்ளையருக்குத் தெரிந்துவிடும். உங்களைத் தாக்குவார்கள்!
பணம் இருக்கிறதே என்றுதான் பயப்படுகிறேன்!
தினம் பாங்கிக்குப் போவது போலப் போங்கள். கைப்பையில் பணம் இருப்பதை மறந்துவிடுங்கள்!

வங்கி மேலாளர் ஆஸ்கர் பாதுகாப்பு கேட்டு வற்புறுத்தினார்
இரண்டு இலட்சம் டாலர் !எடுத்துப் போகும்போதே என் கை நடுங்கும் !
உங்கள் கையில் பணம் கொடுத்துவிட்டேன். அதை பத்திரமா பாங்கியில் கொண்டுபோய்ச் சேர்ப்பது உங்கள் பொறுப்பு !
ஆளுநர் கையை விரித்துவிடவே, மானேஜர் தனியாகப் புறப்பட்டார்.
இவ்வளவு பணத்தை, இதற்குமுன் நான் பாதுகாப்பு இல்லாமல் கையில் எடுத்துப் போனதில்லை !



மானேஜர் ஒரு மரத்தடியில் இளைப்பாறினார். அப்போது ஒரு பேச்சுக் குரல் கேட்டது.

குதிரைகள் விரைந்தன!
ஓ! இவர்கள் கொள்ளையர்கள் அல்லவா?
கொள்ளையரைப் பார்த்ததும், சாரட்டு விரைந்தது! காவலாளி சுட்டான்!

என் கை போச்சு!
என் கழுத்தில் ஒரு குண்டு பாய்ந்து விட்டது!

சுடுவதை நிறுத்து! அவர்கள் திருப்பிச் சுட்டால் நாம் எமலோகத்துக்குப் போகவேண்டியதுதான்!

வால்டர் வந்து வழிமறித்தான்.
எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்! உங்களை அடையாளம் தெரிய வில்லை!
வண்டியில் பணம் இருக்கிறதா?
இல்லை! தபால் எடுக்கப் போகிறோம்!

வண்டியை சோதனை போட்டார்கள் பணம் இல்லாததால் திரும்பி வந்தார்கள்.
அய்யோ! இந்தப் பக்கம் வருகிறார்களே? என்னைப் பார்த்தால் தொலைந்தேன்!

மானேஜர் மறைந்துகொண்டார்.
கவர்னர் இரண்டு இலட்சம் டாலர் அனுப்புவதாகச் செய்தி வந்ததே?
பாங்கிக்குத்தானே போகிறது? பாங்கியைக் கொள்ளையடிப்போம்!
பாங்கிக்குப் பக்கத்து வீடு காலியாகத்தான் இருக்கிறது!
அந்த வீட்டுக்குள் புகுந்து, கன்னம் வைத்து, பணத்தைக் கொள்ளையடிக்கலாம்!

கொள்ளையர்கள் பேசியது முழுக்க மானேஜர் காதில் விழுந்தது.
என்னிடம் பணம் இருப்பது தெரிந்தால், கொள்ளையர்கள் என்னை நார் நாராய்ப் பிய்த்து விடுவார்கள்!

மானேஜரின் மனம் ஊசலாடியது!
நானோ விரைவில் ஓய்வு பெறப் போகிறேன். கொள்ளையர்களின் பெயரைச் சொல்லி...

மானேஜர் வழியில் செரீப்பை சந்தித்தார்.
செரீப் துணைக்கு வந்தார்.
மிகவும் நன்றி செரீப்!
உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியது எனது கடமை!
BANK
BANK
அப்போது மூன்று குதிரை வீரர்களும் வந்தார்கள்.
செரீப் சார்! நாங்கள் ஊருக்குப் புதுசு. இங்கே தங்க, நல்ல ஓட்டல் எது?
அதோ, அந்த பாங்கிக்கு அருகில் இருக்கும் ஓட்டலில் தங்குங்கள்!

ஓட்டலில் தங்கிய மூவரும் வங்கிக்கு வந்தார்கள். அவர்களை மானேஜர் ஆஸ்கர் பார்த்தார்.
ஆயிரம் டாலருக்கு சில்லறை கொடுங்கள்!
கொள்ளையர்கள் போலத் தெரிகிறதே?
பணம் வங்கிப் பெட்டகத்தில் வைக்கப்பட்டது. அன்று இரவு மானேஜர் வந்தார்.
யாரும் இல்லை! பின்புறமா உள்ளே போகலாம்!
வங்கிக்குள் வந்த மேலாளர், பெட்டகத்தைத் திறந்தார்.
கொள்ளையருக்கு முன் நான் முந்திக்கொள்ள வேண்டும்!

சிறிது நேரத்தில் வால்டர் கூட்டத்தார் வந்தார்கள்.
இந்த வீட்டுச் சுவரில் கன்னம் வைத்து, பாங்கி பெட்டகத்தை உடைக்க வேண்டும்!
இன்னும் கச்சேரி தொடங்கவில்லையே?

இந்தா சுத்தியல், உளி!
வாத்தியக்குழு வந்தாச்சு! வேலையைத் தொடங்குங்க!

கொள்ளையர்களே வாத்தியக் குழுவாக வந்தார்கள். சுவரை உடைக்கும் சத்தம் கேட்காமல் இருக்கத் தெருவில் கச்சேரி செய்தார்கள்!
செரீப் இரவு ரோந்து வந்துகொண்டிருந்தார். அவரை மூன்று குதிரை வீரர்களும் சந்தித்தார்கள்.
யார் இந்த இசைக்குழு, செரீப்?
உள்ளூர்க் காரர்கள் அல்ல. ஊர் ஊராகப் பாடுகிறவர்கள் போலிருக்கிறது!

இசைக்குழுவினர் ஆடிப் பாடினார்கள்.
இரவில் இவர்களின் பாட்டை யார் கேட்பார்கள், செரீப்?
ஆனாலும் இனிமையாகப் பாடுகிறார்கள்!

வீட்டுக்குள் சுவரில் ஓட்டை போடும் வேலை மும்முரமாக நடந்தது.
பாட்டு சத்தத்தில் எனக்கே உடைக்கிற சத்தம் கேட்கவில்லை!

ஆனால், பாங்கி சுவரை இடிக்கும் சத்தத்தை மானேஜர் கேட்டுக் கொண்டிருந்தார்!
அவர்கள் உள்ளே வருமுன் நான் வேலையை முடிக்க வேண்டும்!
பெட்டகத்தில் இருந்த எல்லாப் பணத்தையும் எடுத்துக்கொண்டார்!
இரண்டு இலட்சம் டாலருடன் பழைய பணம் 27 லட்சம் டாலரும் இருக்கிறது
எல்லோரும் கச்சேரி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் மெல்ல நழுவி விடலாம்!

மானேஜர் நடந்தபோது,
ரோந்து வந்த செரீப்
திரில் வந்தார்.
செரீப்!
ஓ... மானேஜர்! இவ்வளவு நேரம் வேலை இருந்ததா? கையில் என்ன கனத்த பை?
பை கீழே விழுந்து பணம் சிதறியது!
ஆ!
அத்தனையும் டாலர் நோட்டுகள்!!
அதே நேரம் மானேஜர், செரீப்பை ஓங்கி உதைத்தார்!
ஆ...!

செரீப்பின் துப்பாக்கியைப் பறித்து, அவரது தலையில் ஓங்கி அடித்தார்.
நீ உயிரோடு இருந்தால், நான் அகப்பட்டுக் கொள்ளுவேன் !
நான் பிழைத்தேன்
செரீப் விழுந்துகிடக்க, பணத்தை அள்ளிக்கொண்டு மானேஜர் விரைந்தார்.
சுவரை இடித்து, வங்கிக்குள் நுழைந்துவிட்டார்கள்.
இரும்புப் பெட்டகம், வெ வைத்து உடை வேண்டும்

குண்டு வைத்தார்கள்! வேலை முடிந்தது!
இரும்புப் பெட்டகம் உடைந்தது!
பணத்தை அள்ளு!
குண்டு வெடித்ததும், பாடகர்கள் பறந்தார்கள்! குதிரை வீரர்கள் பரபரத்தார்கள்!!
பாங்கிக்குள் குண்டு வெடித்த சத்தம்! உடனே செரீப்பிடம் சொல்ல வேண்டும்!

திடீர் என்று அங்கே வால்டர் தோன்றினான்!
தலைவர் வந்துவிட்டார்!

குதிரை வீரர்களுக்கு அதிர்ச்சி!
பாங்கி கொள்ளையா?
தலைவருக்கு வழிவிடுங்கள்!

குதிரை வீரர்கள் செயலில் இறங்கினார்கள் !
விடாதீர்கள்.. பிடியுங்கள் !

வழிவிடுங்கள் !
கொள்ளை அடித்துவிட்டு அதிகாரமா பண்ணுகிறாய் ?
பிலிப் சாட்டையை எடுத்தார் !

சாட்டையைச் சுழற்றினார் !
பளீர்...!

கொள்ளையர்கள் ஓட்டம் பிடித்தார்கள் !
பணம் கிடைத்ததா ?
இல்லை தலைவா ! பெட்டகம் காலியாக இருந்தது !!

மானேஜர் வீடு போய்ச் சேர்ந்தார்.
ஊரைவிட்டே... இல்லை, நாட்டே விட்டே வெளியேறிவிட வேண்டும்!
பாங்கியில் மக்கள் கூடிவிட்டார்கள். மூன்று வீரர்களும் அங்கே இருந்தார்கள்.
என்ன நடந்தது?
பாங்கியில் கொள்ளை.. செரீப் அடிபட்டுக் கிடந்தார். ஆஸ்பத்திரியில் இருக்கிறார்!

மருத்துவமனையில்...
டாக்டர்! செரீப் எப்படி இருக்கிறார்?
தலையில் பலத்த அடி
ஆனால், பிழைத்துக் கொள்ளுவார்!
வெளியே வந்த மானேஜர் காதில் அந்தச் செய்தி விழுந்தது!
செரீப் சாகவில்லையா? நான் செத்தேன்!
இந்தக் கொள்ளைக்கும் அந்தப் பாடகர்களுக்கும் நிச்சயம் தொடர்பு இருக்கும்!
அவர்கள் எங்கே போனார்களோ? எப்படியாவது கொள்ளையர்களைப் பிடித்தாக வேண்டும்!

கொள்ளையர்களைப் பிடிக்க, ஊரே திரண்டது! மூன்று குதிரை வீரர்களும் முன்வரிசையில்.
குதிரைகளின் காலடித் தடம் இங்கே இருக்கிறது. இந்த வழியாகத்தான் கொள்ளையர்கள் போயிருக்க வேண்டும்!

ஒரு நீர்த்தேக்கம் குறுக்கிட்டது.
கொள்ளைக்காரர்கள் இந்த நீர்த்தேக்கத்தைக் கடந்து போயிருக்கக் கூடும்!
ஆனால், நமது ஊர் எல்லை இத்துடன் முடிந்துவிட்டது. நமக்கு அங்கே போக அதிகாரமில்லை!
எங்களுக்கு இருக்கிறது! ஆளுநர் அதிகாரம் கொடுத்திருக்கிறார்!

மூன்று வீரர்களும் நீர்த்தேக்கத்தைக் கடந்தார்கள்.
கொள்ளையர்களைப் பிடிக்கத் தானாகவே நமக்கு ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது!

நீர்த்தேக்கத்தைக் கடந்து ஊருக்குள் வந்து சேர்ந்தார்கள்.
இந்தப் பக்கம் வால்டர் கூட்டம் வந்ததா என்று கேட்போமா?

ஊர்க்காரர்கள் ஓடினார்கள்.
என்ன, இப்படி ஓடுகிறார்கள்? வால்டர் என்றால் அவ்வளவு பயமா?
அழுத பிள்ளையும் வாயை மூடுமோ!

யாருமே வால்டர் பற்றிப் பேசத் தயாராக இல்லை. வீட்டுக் கதவுகளைக் கூடப் பூட்டிக்கொண்டார்கள்.
வால்டர் என்றால் இப்படிக் குலை நடுங்குகிறார்களே? அவ்வளவு கொடியவன் போலிருக்கிறது!

மூவரும் தொடர்ந்து போனார்கள்.
குதிரைகள் கூட்டமாக ஓடிய தடம் தெரிகிறது!
சைமன்! அதோ ஒரு ஆள். அவரிடம் கேட்போம்!

மூவரும் அவரை நெருங்கினார்கள்.
இவராவது வால்டர் பற்றிப் பேசுவாரா?

அவர் வேறு யாருமல்ல; பாங்கி மானேஜர்தான். அவர், இவர்களைப் பார்த்துப் பயந்தார்.
என்ன... என்ன வேண்டும்? நீங்கள் யார்?
இவரை எங்கோ பார்த்திருக்கிறோமே? செரீப்புடன் பேசிக்கொண்டு இருந்தார் அல்லவா?

இவர்களைக் கொள்ளைக்காரர் கள் என்று மானேஜர் நினைத்தார்.
நான் யார் தெரியுமா?
துப்பாக்கியை எடுத்தார்.
மரியாதையாப் போய் விடுங்கள்!
அவரது நடவடிக்கை. மூவருக்கும் ஆச்சரியம் அளித்தது. அவர் வைத்திருந்த பணப்பை சந்தேகத்தைக் கிளப்பியது. லியோ துப்பாக்கியை எடுத்தான்.
எங்களிடமும் துப்பாக்கி இருக்கிறது!

லியோ சுட்டான்!
ஆ... என் கை போச்சு!
நீங்கள் பாங்கி மானேஜர்தானே?
என்னை விட்டுவிடு! எல்லா விவரமும் சொல்லுகிறேன்.
சொல்லுங்க! ஏது இவ்வளவு பணம்?
பணத்தைக் கொள்ளையடிக்கக் கொள்ளைக்காரர்கள் வர இருந்தது தெரிந்து, தானே திருடிக்கொண்டதை மானேஜர் தெரிவித்தார்.
அத்தனை பணமும் இந்தப் பையில் பத்திரமா இருக்கிறது!
அவர்கள் பேசியதை ஒரு உருவம் ஒட்டுக் கேட்டது!

அது வால்டர்தான்!
நீ ஓடிப்போய் நம்ம ஆட்களைக் கூட்டி வா!
இதோ, ஒரே ஓட்டம்!

பணத்தையும் இவரையும் ஷெரீப்பிடம் ஒப்படைப்போம்!

வந்தான்.
அந்த ஆளை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்! பணத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள்!! கொடுங்கள்!!!


லியோ பணப் பையை வால்டர் மீது வீசினான்.
இந்தா, பிடி!

அந்நேரம் பிலிப் சாட்டையை, சுழற்ற...
ஆ...!
சைமன்! அந்தத் துப்பாக்கியை எடுத்துக்கொள்!!
அந்த நேரம் கொள்ளைக்கூட்டம் விரைந்து வந்தது!
என் ஆட்கள் வந்து விட்டார்கள்! மூவரும் சரணடையுங்கள்!!

வால்டர் மிரட்டல் வெத்துவேட்டு ஆயிற்று!
அங்கேயே நில்லுங்கள்! அருகில் வந்தால், உங்கள் தலைவர் காலி!
கொள்ளையர்கள் திகைத்து நின்றார்கள்!
அவர்களைப் போகச் சொல்!
எல்லோரும் திரும்பிப் போங்க!

வால்டரின் ஆட்கள் திரும்பிச் சென்றார்கள். அவரது கைகள் கட்டப்பட்டன.



வால்டரைக் குதிரையில் ஏற்றிக்கொண்டு போனார்கள்.

மூன்று வீரர்களும் ஊருக்குள் போகக் கிளம்பினார்கள்.
லியோ! கொள்ளைக் கூட்டத்தார் திரும்பிப் போனார்களே. மீண்டும் வருவார்களா?
அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டு வருகிறேன். திடீர் தாக்குதல் நடத்தி, வால்டரை மீட்க முயற்சி செய்யலாம்!
சற்று தூரத்தில்....
லியோ! நீ சொன்னது சரிதான் கொள்ளைக் கூட்டம் மீண்டும் வருகிறது!
ஊர்க்காரர்கள் போலத் தெரிகிறது!

வால்டரை அடித்துக் கொல்ல வருகிறார்களோ?
ஊர் மக்களை அவ்வளவு கொடுமைப்படுத்தி யிருக்கிறானே?
ஆனால், நாம் கவர்னரிடந்தான் வால்டரை ஒப்படைக்க வேண்டும்!

ஆயுதங்களுடன் மக்கள் வருகிறார்களே!
வால்டர் தொலைந்தான்!

வால்டரைக் காப்பாற்ற மூவரும் குதிரைகளைத் தட்டிவிட்டார்கள்!
தலைவர் வாழ்க!
தலைவரைக் காப்பாற்றுவோம்!

லியோ! மக்கள், வால்டரை விரும்புவது போலத் தெரிகிறதே!
வாழ்க என்று முழக்கமிடுகிறார்களே! குழப்பமாக இருக்கிறதே?
வால்டரிடமே கேட்போம்!


புரட்சி ஏற்படும்போது, நாட்டை விட்டே ஓடத்தான் கவர்னர் பாங்கியில் பணம் சேர்த்து வைக்கிறார்!

சிறிது தூரம் சென்றதுமே கவர்னரின் கொடுங்கோல் ஆட்சியை நேரில் காண முடிந்தது!
அய்யா! இந்தக் கிழவனிடம் கருணை காட்டுங்கள்! இந்த ஆண்டு விளைச்சலே இல்லை!
சும்மா நடிக்காதே! உன்னிடம் எப்படி வரி வசூலிப்பது என்று எனக்குத் தெரியும்!

இராணுவ வீரன், விவசாயியை அடித்தான்!
பணத்தை எங்கே பதுக்கி வைத்திருக்கிறாய்? எடு!
ஏய் நிறுத்து!
நீ யாருடா என்னைத் தடுக்க?
அருகில் நின்ற சைமன் அவன் தலையில் துப்பாக்கியால் அடித்தான்!
எங்கள்கிட்ட துப்பாக்கியைக் காட்டுகிறாயா?

லியோ சாட்டையை வீசினார்!
நாங்கள் நல்லவனுக்கு நல்லவர்கள்! தீயவர்களுக்குத் தீயவர்கள்!!
அய்யோ!
கண்கூடாகப் பார்த்ததில், வால்டர் கூறியது உண்மை என்பது உறுதிப்பட்டது. வால்டரின் கட்டுகளை லியோ அவிழ்த்து விட்டார்!
உன்னைப் பிடித்துக் கொடுக்கும்படி கவர்னர் எங்களிடம் சொன்னார். அது ஏன் என்பதை இப்போது புரிந்து கொண்டோம்!

வால்டரை மீட்க வந்த மக்கள் கூட்டம், அவரை 'அலாக்கா' தூக்கிக்கொண்டது!
மக்கள் தலைவர் வால்டர்... வாழ்க!
நம்மை கவர்னரின் கையாட்கள் என்று நினைத்துத் தான் மக்கள் முதலில் ஓடியிருக்கிறார்கள்!
மக்களின் எழுச்சியைப் பார்த்து, வரி வசூலிக்க வந்த வீரர்களும் மனம் மாறினார்கள்!
விரைவில் மக்கள் புரட்சி வெடிக்கப் போகிறது!
இப்பவே நாமும் வால்டருடன் சேர்ந்துவிடுவோம்!

உடனே கவர்னரைப் பிடிக்க வேண்டும்!
அவரிடம் இராணுவம் இருக்கிறது!
இராணுவமும் அவர் மீது அதிருப்தியாக இருக்கிறது!

மக்களுடன் சேர்ந்து மூன்று வீரர்களும் கிளம்பினார்கள்!
நாமும் போவோம்! கவர்னருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும்!
நாம் எப்போதும் நியாயத்தின் பக்கந்தான்!
என்னை என்ன செய்யப் போகிறார்களோ?
வங்கி மேலாளர் அஞ்சினார்!

வால்டர் தலைமையில் எல்லாரும் கிளம்பினார்கள்!
வழிநெடுக மக்கள் நம்மோடு சேருவார்கள்! சர்வாதிகார ஆட்சிக்கு முடிவு கட்டுவோம்!
ஆளுநருக்குத் தகவல் எட்டியது
ஆபத்து! மக்கள் திரண்டு வருகிறார்கள் வால்டர் தலைமையில்!
முதலில் மாளிகைக் கதவை அடை!

கதவை உடைத்துக்கொண்டு மக்கள் புகுந்தார்கள்!
கவர்னரை கைது செய்வோம்! மேஜரைக் கூப்பிடு!
இராணுவமும் மக்கள் பக்கம் சேர்ந்துகொண்டது!
தப்பி ஓடினால்தான் தலை தப்பிக்கும்! சாரட்டு வண்டியைத் தயார்ப் பண்ணு!!


பிலிப் பாய்ந்து வந்தார்
மக்கள் எழுச்சி பெற்றுவிட்டார்கள்! அநியாயக்காரன் தப்பிக்கவே முடியாது!!

என்னை மன்னித்துவிடுங்கள்! விட்டுவிடுங்கள்! நாட்டை விட்டே ஓடிவிடுகிறேன்!!
செய்த அக்கிரமங்களுக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டாமா!

சர்வாதிகாரம் வீழ்ந்தது. மக்களாட்சி மலர்ந்தது. வால்டர் தனது பழைய தொழிலான மாடு வளர்க்கும் தொழிலுக்குத் திரும்பினார்.
மக்களுக்கு உதவக் கொள்ளைக் காரனாக மாறினேன்! இனி மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளுவார்கள்!

ஆளுநருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் அவர் கல்லுடைத்தார்.
ஒழுங்கா வேலை செய்! இல்லாவிட்டால், ரொட்டி கிடைக்காது!!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண
சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.
ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

ராணி காமிக்ஸ்
மூன்று வீரர்களின்
முரட்டுத் தாக்குதல்
சர்வாதிகாரி
ரூ.5